**20.09.2023.** CC. 123/2015 PW.4 திரு. கினோ

**கடந்த 09.02.2021ம் தேதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை முடிவு பெறாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற Crl.M.P. No. 5080/2019, dated 15.03.2021ன் படி கு.வி.மு.ச 1973 பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : 2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மையானது கு.வி.மு.ச பிரிவு 1973 பிரிவு 317(1)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அ.சா1 எனது சகோதரி. அ.சா2 எனது அம்மா. அ.சா3 எனது சகோதரர். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் - ஆம் விசாரித்தார்கள். நான்போலீஸ் விசாரணையின் போது எனது சகோதரியின் திருமணத்தின் போது 5 இலட்சம் ரொக்கமும், 75 பவுன் நகையும் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் நான் 5 இலட்சம் ரொக்கமும், 45 பவுன் நகையும் என்று சொல்லியுள்ளேன்.

2. அதுபோல் போலீஸ் விசாரணையில் 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது அக்காவின் கையை திருகி, கழுத்தை நெறித்து கூடுதலாக 5 இலட்சம் ரூபாய் உன் அம்மா வீட்டிலிருந்து வாங்கி வா என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள்காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு எனது சகோதரியும் 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபரும் சேர்ந்து வாழவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி எனது சாட்சியத்தில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு எனது சகோதரியை 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் அழைத்துச்சென்றார் என்று முதல் விசாரணையில் சொல்லியிருந்தால் அது தவறு.

3. எங்களது வீடும் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீடும் ஓரே ஊர் என்றால் சரிதான். 20 வயதிற்கு மேல் குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். முதல்விசாரணையில் சொன்னவிவரங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாய தெரியாது. எனது சகோதரி சொல்லித்தான் தெரியும். நான் எனது சகோதரிக்காக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.